MCOP. 68/2022

நாள்.. 28.02.2023

ம.சா. 1 – சீதாரமணி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் முன் விசாரணை தொடர அனுமதிக்கப்பட்டார்....

<u>முன் விசாரணை தொடர்ச்சி</u>

என்னுடைய ஆதார் கார்டு நகல் ம.சா.ஆ.15 (அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது) என் கணவரின் பிரேத பரிசோதனை அறிக்கை ம.சா.ஆ.16. மனுப்படி உத்தரவாக வேண்டும்.

<u>3ம் எதிர்மனுதார் தரப்பு குறுக்கு விசாரணை</u>

விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றும் நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் விவரங்கள் எனக்கு தெரியும். ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில் என் கணவர் தான் விபத்திற்கு காரணம் என்று கூறி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அந்த விவரம் தெரியும். விபத்திற்கு என் கணவர் தான் காரணம் என்று சொல்லி என் கணவர் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் 2ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிச்சென்ற 1ம் எதிர்மனுதாரர் திடீரென வாகனத்தை நிறுத்தியதால் விபத்து ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கையில் விபத்தானது சாலையின் இடதுபுரம் நின்று கொண்டிருந்த வாகனத்தின் மீது இருசக்கர வாகனத்தில் சென்ற விபத்தில் இறந்தவர் வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. விபத்தானது என்னுடைய கணவரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவால் சென்றதால் தான் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட விவரம் சம்மந்தமாக மேல்நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் கணவர் விபத்து சமயத்தில் மீன்பிடி தொழில் செய்து தினமும் குறைந்தபட்சம் ரூ.1,000/– மற்றும் பேட்டாவாக ரூ.200/–ம் பெற்று வந்தார் என்றால் வழக்கிற்காக அதிக

இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மனுதார்கள் 2, 3, 4 திருமணமாகி அவர்களது கணவர்களோடு தனியாக வசித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். விபத்திற்கு என் கணவரின் கவனக்குறைவு தான் காரணம் என்பதால் தான் 3ம் எதிர்மனுதார் நிறுவனம் மனுதார்களுக்கு ஏற்பட்ட இழப்பிற்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் என் கணவருக்கு இருசக்கரவாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

<u>4ம் எதிர்மனுதார் தரப்பு குறுக்கு விசாரணை</u>

4ம் எதிர்மனுதாரரான சிவபாரதி என் மகன் என்றும் அவருக்கு இன்னும் திருமணமாகவில்லை என்றும் என்னோடு தான் என் மகன் இருக்கிறார் என்றும் சொன்னால் சரிதான். இழப்பீடு தொகையில் 4ம்எதிர்மனுதாரருக்கு இறந்தவரின் மகன் என்ற முறையில் பங்கு உள்ளது என்றால் சரிதான். மனுத்தாக்கல் சமயத்தில் அவர் வெளிநாட்டில் இருந்ததால் என்னுடன் சேர்ந்து மனுதாக்கல் செய்ய இயலாததால் அவரை 4ம் எதிர்மனுதாரராக சேர்த்தேன் என்றால் சரிதான். தற்போது வெளிநாட்டிலிருந்து திரும்பி என்னுடன் தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.